முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1526

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.12.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அறம்காத்து வரும் தேசிகா
மாறுதலை உலகில் செய்வேன் என
மாதர்மவானாய் தவசியாய் வந்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17 ம் நாள், 03.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
வரமென உன் சக்தி உலகமெல்லாம்
வள்ளல் தன்மையாக பெருகி நிற்க
3. நிற்கவே அரங்கன் பேர் சொல்லும் அன்பர்கள் எல்லாம்
நிலவுலகில் ஞானிகளாவது உறுதியப்பா
ஏற்புகொண்டு அரங்கன் தர்மத்தை
எவரெல்லாம் கிளைச்சங்கங்களாக உருவாக்கி
4. அற்புதம்பட தர்மம் வளர்க்கின்றாரோ
அவர்கள் அனைவருக்கும் அவர்கள்
கிளை சார்ந்த அன்பர்களுக்கும்
இனிபிறவாத பேறு சித்தியாவது உறுதி
5. உறுதி தந்து அரங்கன் யான்
உயர்வாக தர்மவேலியிட்டு உறுதி தந்து அரங்கன் நீயும்
உத்தமமாக தர்மவேலியிட்டு காத்துவர
கருதி உலகோர் உன்பால் ஒன்றிணைந்தால் போதும்
6. கலியில் வறுமை பசிப்பிணி அகன்றோடும்
கட்டாயம் தர்மபலம் பெருகும்
பெருகவே ஆபத்தின்றி இந்த பேருலகம்
புகலுவேன் பல்வேறு வகையில் பாதுகாப்பாக மாறி இனிதே

7. வருங்காலம் ஞானிகள் ஆட்சியாக
வாய்மை நிறைந்த ஞான ஆட்சிக்காலமாக மாறி
ஆறுமுகனார் என் ஆசிபட
அரங்கன் உன் அவதார நோக்கம் பூர்த்தியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–